# கணினி வழித் தேர்வுகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்

# Instructions to candidates appearing for Computer Based Test (CBT)

(updated upto 10.10.2025)

Please refer page No.11 to see the details of amendments

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

## Instructions to candidates appearing for Computer Based Test (CBT)

**கணினி வழித் தேர்வுகளுக்கான**

**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்**

I. 1. **தேர்வர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். தேர்வு மையத்தினை மாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.**

The candidate has to appear for the examination only at the Centre / Venue where he/she has been allotted. Change of centre / venue is not permitted.

2. **தேர்வர்கள் கட்டாயமாக நுழைவுச் சீட்டினை தேர்வு மையத்திற்குக் கொண்டு சென்று காண்பிக்க வேண்டும். அத்துடன் தேர்வர்கள், தங்களது ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN card) / வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை தேர்வு மையத்திற்குக் கொண்டு வர வேண்டும்,**

Compulsorily candidates have to carry the Memorandum of Admission (Hall Ticket) and the same has to be produced at the examination venue. Candidates shall also bring with them, a photocopy of their Aadhaar card / Passport / Driving Licence / Permanent Account Number (PAN) card / Voter ID card.

3. **தேர்வரது நுழைவுச் சீட்டில், தேர்வரின் புகைப்படம் அச்சிடப்படாமலிருந்தாலோ அல்லது தெளிவாக இல்லாமலிருந்தாலோ அல்லது தேர்வரின் தோற்றத்துடன் பொருந்தவில்லையென்றாலோ, தேர்வர் தன்னுடைய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றினை ஒரு வெள்ளை காகிதத்தில் ஒட்டி, அதில் தனது பெயர், முகவரி, பதிவு எண்ணைக் குறிப்பிட்டு, முறையாகக் கையொப்பமிட்டு, தேர்வுக் கூட அனுமதிச்சீட்டின் ஒளிநகல் மற்றும் ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN card)/ வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை இணைத்து அதனை தலைமைக் கண்காணிப்பாளரிடம் மேலொப்பமிடும் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும்.**

If the photograph of the candidate in the memorandum of admission (hall ticket) is not printed or not clear or does not matchwith candidate's appearance, he /she should furnish a separate passport size photograph affixed on a plain paper, along with his / her name, address, register number and signature along with a copy of the memorandum of admission (hall ticket) and a copy of Aadhaar card/ passport/Driving Licence/Permanent Account Number (PAN) card / Voter ID card to the Chief Invigilator who shall endorse it.

4. **தேர்விற்கான வருகைப் பதிவானது, தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகத் தொடங்கும். மேலும், தேர்வர் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வுக் கூடத்திற்குள் கட்டாயம் இருக்க வேண்டும். அதன் பின்னர், வருகை புரியும் தேர்வர்கள் எவரும் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

The Registration for the examination shall start one hour before the time scheduled for the commencement of the examination. Further, the candidates should present themselves at the examination venue 30 minutes before the time scheduled for the commencement of examination and no one shall be allowed into the venue thereafter.

5. [3][**தேர்வர்கள் மின்னணு மற்றும் தொழில்நுட்ப சாதனங்களைத் (கைப்பேசி, தொடுதிரை கைக்கடிகாரம் முதலியன) தேர்வு அறைக்குள் கொண்டு செல்ல அனுமதியில்லை. அதனால் மின்னணு சாதனங்களை எடுத்து வர வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

Candidates are not permitted to carry any electronic and / or technical device (Cell phone, Smart Watch etc.,) into the examination hall. They are advised not to bring the electronic gadgets with them.][3]

6. **தேர்வெழுதும் ஒவ்வொரு தேர்வருக்கும் ஒரு கணினி ஒதுக்கப்படும்.**

Each candidate will be assigned a Computer to take up the examination.

7. **கணினி வழித் தேர்விற்கு, சுட்டியினை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தாலே போதுமானது. கணினியறிவு அவசியமில்லை.**

No computer knowledge is required to take up the Computer Based Test. Knowledge in Mouse operation would suffice to take up the Computer Based Test.

8. **தேர்வர்களுக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியன வழங்கப்படும். அவற்றைப் பயன்படுத்தி கணினியில் புகுபதிகை (login) செய்ய வேண்டும்.**

Candidates will be provided with a user name and password to login the system.

9. **பதிவு எண், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றை பதிவு செய்ய மட்டும் விசைப் பலகையைப் பயன்படுத்தவும்.**

Use the keyboard only to key – in the Register Number, User id (reg. id) and password.

10. **திரையில் தோன்றும் அனைத்து அறிவுரைகளையும் கவனமாகப் படித்து தவறாது பின்பற்ற வேண்டும்.**

Necessary instructions will be displayed on the screen. Kindly read all the instructions carefully and follow the instructions without fail.

11. **வினாக்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளில் இருக்கும். சில தொழில் நுட்பப் பணியிடங்களுக்கான தேர்வுகளுக்கு அதற்கான அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி வினாக்கள் ஆங்கிலத்தில் மட்டும் இருக்கும்.**

The questions will be bilingual in English and Tamil. For certain Technical posts, questions will be in English only, as specified in theNotification.

---

3. Amended vide Commission’s orders dated 10.10.2025

12. **கணினி வழித் தேர்வு என்பது தாளின் மீது எழுதுகோல் கொண்டு விடையை நிரப்பும் தேர்வு போன்றதே.**

Computer Based online Test (CBT) is similar to paper pen shading test.

13. **வினா விடைகளில் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினா விடைகளே இறுதியானது.**

In case of doubt in the questions and answers, English version is the final.

14. [4][**கணிணி வழித் தேர்வில் வினாக்கள் மற்றும் அதற்கான ஐந்து விடைத் தெரிவுகள், ஏறுமுக வரிசைப்படி ஒவ்வொன்றாகக் கணிணித் திரையில் தோன்றும். அதன் வரிசையிலேயே ஒன்றன்பின் ஒன்றாக விடையளிக்கலாம்.**

In Computer Based Test, the Questions with five options will appear on the Computer screen in ascending order, which can be answered one by one.][4]

15. **ஒவ்வொரு தேர்வரின் கணிணித் திரையிலும், கேள்விகள் மற்றும் விடைகளின் வரிசை மாற்றம் செய்யப்பட்டிருக்கும்.**

The Question and optional answers will be shuffled randomly and displayed on the Computer Screen to each candidate.

16. [5] [**தேர்வர்கள் ஒவ்வொருவருக்கும், குறிப்புகள் மற்றும் வழிமுறைகளை எழுதிப்பார்க்க (Rough Work) ஒரு பணித்தாள் (Work sheet) வழங்கப்படும். தேர்வு முடிந்ததும் அதை அறைக் கண்காணிப்பாளரிடம் திரும்ப ஒப்படைத்து விட வேண்டும்.**

For each candidate, a work sheet will be provided to write notes and for rough work. After the completion of the examination, those sheets should be handed over to the room invigilator.][5]

17. **தேர்வர்கள், வினாவிற்கு உரிய மிகச் சரியான விடையினை சொடுக்க வேண்டும். தேர்வர்கள், 'next' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் அடுத்த கேள்விக்கு செல்லலாம் அல்லது 'previous' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் முன்புள்ள கேள்விக்கு செல்லலாம்.**

Candidate has to click the best answer to the question. Candidates can proceed to the next question by clicking next button or previous question by clicking previous button.

18. **தேர்வர்கள் சுட்டியைப் (Mouse) பயன்படுத்தி மட்டுமே சரியான விடையினைத் தேர்ந்தெடுக்கலாம் மற்றும் வினாக்களுக்கு பதிலளிப்பதைத் தொடரலாம்.**

Candidate can use only the mouse to select the correct answers and proceed with answering the questions.

---

4,5. Amended vide Commission's orders dated 10.10.2025

19. [6][எல்லா வினாக்களுக்கும் தொடர்ச்சியாகத்தான் விடையளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. தேர்வர்கள் விரும்பினால் சில கேள்விகளுக்கு விடையளிக்காமல் அடுத்த கேள்விக்கும் செல்லலாம். தேர்வர்கள் தேர்வு முடியும் நேரத்திற்கு முன் எந்த ஒரு வினாவினையும் பார்வையிடலாம், மற்றும் விடையினை மாற்றலாம்

There is no necessity to answer all the questions in sequence. If candidates wish, they may skip certain questions and move on to the next one. Candidates can review any question and may change their answers at any time before the examination concludes.][6]

20. தேர்வர்கள் தேர்வு நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் தங்களது விடைகளை சமர்ப்பிக்கலாம்.

Candidate can submit their answers at any time during the examination.

21. [7][தேர்வு நேரத்திற்கு முன்பாக தேர்வர்கள் தேர்வினை முடித்தாலும், தேர்வு நேரம் முடியும் வரை அவர்கள் தங்களது இருக்கையிலேயே இருக்க வேண்டும். அவர்கள் தேர்வு நேரம் முடியும் வரை தேர்வுக்கூடத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

Even if the candidate finish the examination before the scheduled time, they must remain seated until the examination time is over. They will not be allowed to leave the examination hall until the exam time is completed.][7]

22. விடைகளை சமர்ப்பித்தப் பின்னர், தேர்வர் மேலும் தேர்வினை தொடர வாய்ப்பில்லை.

Once the entire answers are submitted, the candidates have no option to proceed further.

23. தேர்வர்கள் தங்கள் விடையினை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், தேர்வு முடியும் நேரத்தில் தானாகவே விடைகள் சமர்ப்பிக்கப்பட்டு விடும்.

If the candidates fail to submit their answers, the system will automatically submit the answers to the server, at the closure of the examination.

24. பார்வைக் குறைபாடுள்ளவர்கள், கேள்வி மற்றும் விடைகளின் எழுத்து வடிவங்களை தேவைக்கேற்ப பெரிதாக்கிக் கொள்ள முடியும்.

The question and answers can be zoomed to the required level for the candidates with visual impairment.

25. தேர்வர்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ய, வருகைத் தாளில் கையொப்பமிட்டு பெருவிரல் ரேகையினைப் பதிவு செய்ய வேண்டும்,

Candidates have to sign the attendance sheet and affix thumb impression for verification of his/her identity.

---

6,7. Amended vide Commission’s orders dated 10.10.2025

26. **தேர்வறை கண்காணிப்புக் கருவி மூலம் கண்காணிக்கப்படும்,**

The Examination Hall will be under camera surveillance.

27. **தேர்வாணைய இணையதளம் (www.tnpsc.gov.in) – ல் உள்ள மாதிரி தேர்வினை பழகுவதன் மூலம், கணினி வழித் தேர்வில், சுட்டியைக் கையாளும் முறையினை அறிந்து கொள்ளலாம். மாதிரி தேர்வு என்பது, தேர்வு நாளன்று நடைபெறும் கணினி வழியில் நடைபெறும் இணையத் தேர்வு போன்றது. மாதிரித் தேர்வில் படிப்படியான அனைத்து விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளது. தேர்வர்கள் மாதிரித் தேர்வினை எத்தனை முறை வேண்டுமானாலும் பழகிக் கொள்ளலாம்.**

To acquaint with the operation of Mouse and the CBT, the candidates can take up the mock test available in the Commissions website (www.tnpsc.gov.in) and they can practice the usage of mouse in the mock test. Mock test is similar to the CBT to be held on the day of examination. In the Mock test, all the steps are given similar to the CBT. Candidates can practice the mock test as many times as he/she likes.

28. **தேர்வர்கள் விண்ணப்பத்தில் தெரிவு செய்த அல்லது அனுமதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்தினை அல்லாமல் வேறு பாடத்தாள் மாற்றி எழுதும் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**

Answer sheet answered other than the subject opted by the candidate in the online application /specified in the Hall Ticket will be invalidated.

29. [8][**தேர்வர்கள் உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள 7 நாள்கள் கால அவகாசத்தில் ஒரு தாளுக்கு ரூ.100 /- வீதம் கட்டணம் செலுத்தி, தங்களது விடைத்தாள்களை ஒரு முறைப் பதிவு (OTR) வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக QPHTML இணைப்பு வழங்கப்படும்.**

The QPHTML link shall be provided to the candidates, to download their response sheets on payment of Rs.100/- per Paper, during the answer key challenge period (for seven days) through their One Time Registration (OTR).]8

## II. குற்றவியல் நடவடிக்கை (கொள்குறி வகைத் தேர்வுகளில் தேர்வாணையத்தின் அறிவுறுத்தல்களை மீறுவோருக்கான தண்டனை)

Criminal Action (Penalty for violation of Commission's Instructions in the Objective type examination)

1. **தேர்வுக்கூடத்தில் தேர்வரின் தவறான நடத்தை மற்றும் ஒழுங்கீனச் செயல்களுக்கு (விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின் பத்தி 17 (A)(XV) – ஐப் பார்க்கவும்)**

Misbehaviour and indiscipline in the examination hall (Refer para.17(A) (xv) of Instructions to Applicants.

---

8. Amended vide Commission's orders dated 10.10.2025

2. **ஆள்மாறாட்டம் மற்றும் தேர்வுக் கூடத்திற்குள் அல்லது வெளியே விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவது உள்ளிட்ட எவ்வித முறைகேட்டிலும் ஈடுபடும் பட்சத்தில், குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன் தேர்வாணையத்தால் தக்கதென கருதப்படும் காலம் வரையில் தேர்வு எழுதுவதிலிருந்து விண்ணப்பதாரர் விலக்கி வைக்கப்படுவர்.**

Indulging in any type of malpractice, including impersonation and resorting to unfair means within the examination hall or outside willlead to debarment for any period as deemed fit by the Commission,besides initiation of criminal action.

III. பிற அறிவுரைகள்

Other Instructions

1. **தேர்வர்கள்** தேர்வாணைய இணையதளத்தில் அதாவது, www.tnpsc.gov.in/grievance.tnpsc@tn.gov.in-ல் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின் பத்தி 17 ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கட்டாயம் படித்து பின்பற்ற வேண்டும். (தேர்வாணையம் நடத்தும் பல்வேறு நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகள் எழுதும் **தேர்வர்** பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்) இவ்வறிவுரைகளை கட்டாயமாக தவறாது பின்பற்ற வேண்டும்.

Candidates should read and follow the instructions given under paragraph No. 17 of the INSTRUCTIONS TO THE APPLICANTS (Instructions to candidates to be followed while appearing for written examinations conducted by the Commission), which is available on the Commission's website, viz., www.tnpsc.gov.in/grievance.tnpsc@tn.gov.in - These instructions should be followed scrupulously.

2. தேர்வுக் கூடத்தில் **தேர்வர்கள்** வினாக்களுக்கான விடைகள் தொடர்பாக அறை கண்காணிப்பாளரையோ அல்லது வேறு அலுவலரின் உதவியையோ நாடுதல், தேர்வரின் விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வரை தகுதிநீக்கம் செய்வதற்கும் வழிவகுக்கும்.

Seeking the help / assistance of any official / hall supervisor in answering questions in examination hall will lead to invalidation and debarment of the candidate.

## Important Instructions for Objective Type Examinations in CBT

### கொள்குறி வகைத் தேர்வுகளுக்கான முக்கிய விதிமுறைகள் -

a. ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

One question will be displayed on the screen at a time.


b. தேர்வு எழுதுவதற்கான கால அளவானது, திரையின் மேல் வலது மூலையில் உள்ள count down timer மூலம் காண்பிக்கப்படும். இது மீதமுள்ள நேரத்தை **Time Left:** என காண்பிக்கும். (உதாரணமாக தேர்விற்கான கால அளவானது 3 மணி நேரமாக இருப்பின், தேர்வின்

தொடக்கத்தில், timer 180 நிமிடங்களைக் காண்பிக்கும் மற்றும் தேர்வில் உதவியாளருடன் / உதவியாளரின்றி வரும் தகுதியான மாற்றுத்திறனாளி **தேர்வர்களுக்கு** 240 நிமிடங்கள் என காண்பிக்கும். இக்கால அளவானது படிப்படியாகக் குறையும்). Timer பூஜ்ஜியத்தை அடையும் போது, தேர்வு தானாகவே முடிவடையும். அதன்பிறகு உங்கள் தேர்வானது கணினி அமைப்பால் தானாகவே சமர்ப்பிக்கப்படும்.

Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display the remaining time as **Time Left.** (For example: if duration of examination is 3 hours, at the beginning of exam, timer will show 180 minutes and for Differently Abled candidates with scribe / without scribe 240 minutes, which will reduce gradually with passage of time). When the timer reaches zero, the examination will end by itself and your examination will be submitted by the system automatically.

c. **கேள்வி எண் பெட்டி:**


1. திரையின் வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கேள்வி எண் பெட்டியானது பின்வரும் குறியீடுகளில் ஒன்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு கேள்வியின் நிலையையும் காண்பிக்கும்.




'Marked for Review' என்கிற நிலையில் உள்ள கேள்விகளை மீண்டும் ஒரு முறை நீங்கள் சரிபார்க்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன.

**c. Question Number Box:**

1. Question Number Box displayed on the right side of the screen will show the status of each question using one of the following symbols:



The 'Marked for Review' status for a question simply indicates that you would like to look at that question again.

2. கேள்வி எண் பெட்டியின் இடது பக்கத்தில் தோன்றும் ">" அம்புக்குறியைக் கிளிக் செய்வதன் மூலம் கேள்விஎண் பெட்டியின் அளவை நீங்கள் குறைக்கலாம். இதன் மூலம் திரையில் உங்கள் கேள்வியை பெரிதாக்கிப் பார்க்கலாம். கேள்விஎண் பெட்டியை மீண்டும் பார்க்க விரும்பினால், திரையின் வலதுபுறம் உள்ள '<' அம்புக்குறி மீது கிளிக் செய்யவும். உங்கள் கேள்விப் பகுதியை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ ஸ்க்ரோல் செய்யாமலேயே பார்க்க விரும்பினால்  மற்றும்  ஆகிய குறிகளைப் பயன்படுத்தலாம்.

You can click on the **">"** arrow which appears to the left of question number box to minimize the question number box. This will enable you to view the question on a bigger area of the screen. To view the question number box again, you can click on **"<"** arrow which appears on the right side of the screen.

You can click on  to navigate to the bottom and  to navigate to the top of the question area, without scrolling.

3. பதிலளிக்கப்பட்ட வினாக்கள், பதிலளிக்கப்படாத வினாக்கள், பார்க்கப்படாத வினாக்கள், சரிபார்ப்பதற்காக குறிக்கப்பட்டுள்ளவை மற்றும் பதிலளிக்கப்பட்டு மீண்டும் ஒரு முறை சரிபார்ப்பதற்காக குறிக்கப்பட்டுள்ளவை ஆகிய அனைத்தும் தொகுக்கப்பட்டு கேள்விஎண் பெட்டியின் மேலே காட்டப்படும்.

The summary of number of questions answered, not answered, not visited, marked for review and answered and marked for review will be displayed above the question number box.

**d. கேள்விக்கு விடையளிக்கும் முறை**
**Answering a Question**

1. வினாக்களானது ஏறுமுக வரிசைப்படி ஒவ்வொன்றாக கணினித் திரையில் தோன்றும், அதற்கு ஒன்றன் பின் ஒன்றாக விடையளிக்கவும்.

The questions will appear on the screen in ascending order, which can be answered one by one.

2 ஒரு வினாவிற்கான விடையைத் தேர்வு செய்ய அதற்கென அளிக்கப்பட்டுள்ள விடைத் தெரிவுகளில் ஒன்றின் மீது கிளிக் செய்யவும்.

To select your answer of a question, click on the button of one of the options.

3. ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்த பின் உங்கள் விடையை சேமிக்க **Save and Next** பட்டன் மீது கிளிக் செய்யவும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் விடைகள் சேமிக்கப்பட மாட்டாது.

**<u>Click on Save and Next button after answering every question to save your answer.</u>** Otherwise your answer will not be saved.

4. நீங்கள் தேர்ந்தெடுத்த விடைத்தெரிவை நீக்க வேண்டுமெனில், தேர்ந்தெடுத்துள்ள விடைத்தெரிவின் மீதுள்ள பட்டனை கிளிக் செய்யவும் அல்லது **Clear Response** பட்டன் மீது கிளிக் செய்யவும்.

**e)** **படங்களைப் பெரிதாக்குவதற்கான அறிவுறுத்தல்கள்**

**Instruction for enlarging images**

**வினாவில் வழங்கப்பட்டுள்ள படத்தை பெரிதாக்கிப் பார்க்க, படத்தின் மீது கிளிக் செய்து மவுசில் உள்ள ஸ்க்ரோலிங் வீலை சுழற்றவும்.**

To view the image provided in the question in a bigger size, click on the image and rotate the scrolling wheel on the mouse.

**தேர்வர்கள் ஏதேனும் முறைகேட்டில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கை/ தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.**

Any attempt of malpractice found, will render you liable to such penal action as the Commission may decide.

**நாள்: 10.08.2022** **செயலாளர்**

## Amendments

| Sl.No. | Subject | Date |
|---|---|---|
| 1. | Para I(26) is deleted with respect to mouse activity of the candidates. | 07.01.2025 |
| 2. | In Paras the word " விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்கள் " wherever it occurs, it has been changes as "தேர்வர் / தேர்வர்கள்" | 10.10.2025 |
| 3. | In Para I(5), the words 'Cell Phone, Smart watch etc.,' is added with respect to not permitted materials to be carry at the examination hall. | 10.10.2025 |
| 4. | Para I(14) is modified with respect to display of the Questions in the Computer | 10.10.2025 |
| 5. | Para I(16) is modified with respect to usage of worksheet | 10.10.2025 |
| 6. | Para I(19) is modified with respect to finding the correctness of the answers | 10.10.2025 |
| 7. | Para I(21) is modified with respect to attendance of the candidate till the closure of examination. | 10.10.2025 |
| 8. | Para I(29) is added with respect to providing response sheets to candidates during answer key challenge period. | 10.10.2025 |